RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/irjt22235

OPEN ACCESS

# அகநானூற்றில் பண்பாடு

பொ. இரவீந்திரன் [அ, *]

[அ] தமிழ்த்துறை, தெ.தி. இந்துக் கல்லூரி, நாகர்கோவில்-2, தமிழ்நாடு, இந்தியா

# Culture in Agananooru

**P. Ravindaran** [a, *]

[a] Department of Tamil, S.T. Hindu College, Nagercoil 2, Tamilnadu, India

* Corresponding Author: pravindran@gmail.com

Received: 05-02-2022
Revised: 12-04-2022
Accepted: 21-04-2022
Published: 30-04-2022

**ABSTRACT**

Culture distinguishes man from other species. The smallest unit of culture is called cultural component. Culture can be divided into two types namely material culture and non-material culture. Material culture includes all kinds of things that people make for their needs. Non-material culture includes all elements that do not take material form. Material culture and non-material culture are interrelated rather than separate. Ancient Tamils used to conduct weddings on Urogini Nakshatra day. Fresh sand has been spread in the fields, lights have been lit, flower garlands have been hung and houses have been decorated. Utensils and other items have been given freely. The women have cheered for the leader to play the whole murusa. The bride and groom are greeted with flowers and water lily. Hospitality is one of the best traditions of Tamils Such hospitality can also be found in Agananooru. They wear ornaments like khu, thodi, bow, chilambu and natural ornaments made of leaves, leaves and shoots.

**Keywords:** Culture, Agananooru, Thirumanam, Virunthobal, Unavu, Aadai, Anikalan

## முன்னுரை

பண்பாடு மனிதனை பிற உயிரினங்களிடமிருந்து பிரித்துக் காட்டுகிறது. பண்பாட்டின் மிகச் சிறிய அலகே பண்பாட்டுக்கூறு எனப்படும். பண்படுவது பண்பாடு ஆகும். மனம், சொல், செயல்களில் பிறருக்குத் தீங்கு செய்யாது பொது நலத்துடன் வாழ்வதே பண்பாடாகும். உள்ளத்தளவால் திருத்தம் பெற்று ஒழுக்கத்துடன் வாழ்வதையே பண்பாடு எனலாம். பிறரின் நல்லியல்புகளை அறிந்து அதற்கேற்றவாறு தாமும் நல்லொழுக்கத்துடன் நடந்து கொள்வது பண்பாடு என்று கூறலாம். குறிப்பிட்ட இடத்து மக்களின் பழக்க வழக்கங்களும், நம்பிக்கைகளும், கலைகளும் சிந்தனையை வெளிப்படுத்தும் முறைகளும் மக்களின் சிந்தனை வெளிப்பாடும் பண்பாடு என்று தமிழ் அகராதி கூறுகின்றது.

ஒரு சமூகத்தின் பண்பாட்டை பிரதிபலிக்கும் மக்களின் ஒழுக்கம், ஆடை, அணிகலன், உணவுமுறை, திருமண நிகழ்ச்சி, விருந்தோம்பல், நம்பிக்கைகள், கடவுள் வழிபாடு போன்ற பலவற்றை ஆராய்ந்தால் அதன் வழியாக நாம் சமூகத்தின் மதிப்பினை அறிந்து கொள்ள இயலும். அவ்வகையில் அகநானூற்றில் பிரதிபலிக்கும் தமிழ் பண்பாட்டினை உணர்த்துவதாக இக்கட்டுரை அமைகின்றது.

## பண்பாடு

பண்பாடு என்பது மக்களால் ஆக்கப்பெற்ற கருவி. பண்பாடு என்பது மக்கள் அனைவரும் கூட்டாகச்சேர்ந்து செயல்படும்போது உண்டாகும் நடத்தை முறைகளின் சேர்மமாகும். இது அந்தந்தச்

சமுதாயத்திற்கு மட்டுமே உரியது. இது உயிரியல் நிலையில் மரபுரிமையாக வராதது. மக்கள் தலைமுறை தலைமுறையாக குழுவாகச் சேர்ந்து கற்ற நடத்தை முறைகளும், பழக்கங்களும், மரபுகளும் சேர்ந்த ஒரு தொகுதியே பண்பாடு ஆகும். பண்பாடு என்பது மனிதனின் உடல்சாராத தகவமைப்பு. பண்பாடு என்பது மனிதனால் தோற்றுவிக்கப்பட்ட சுற்றுச்சூழல். இதில் பொருள்சாராப் பண்புகள், சட்டங்கள், நம்பிக்கைகள் முதலானவை அடங்கும். பண்பாடு என்பது மரபு வழியில் புரிந்துகொண்டுள்ளவை பற்றிய ஓர் அமைப்பு. இது கற்றலின் மூலம் பெறப்படுவது; கற்றல் நடத்தைமுறையின் வழி உருவாக்கப்படுவது. பண்பாடு என்பது அனைவராலும் பகிர்ந்துக் கொள்ளப் பட்ட கருத்துக்களும், சமுதாய மரபுரிமையாகப் பெறப்பட்ட நம்பிக்கைகளும், பழக்கவழக்கங்களும் அடங்கிய தொகுப்பாகும் (Bhaktavatchala Bharathi, 2016).

## தமிழர் திருமணமுறை

பண்டைத் தமிழ் மக்கள் திருமண விழாவை எவ்வாறு நடத்தினர் என்பதை அகநானூற்றுப் பாடல்கள் கூறுகின்றன. இதனை,

“தன்பெரும் பந்தர்த் தருமணல் நெமிரி

மனைவினைக் குறித்து மாலைத் தொடரிக்

கனைஇருள் அகன்ற கவின்பெறு காலைக்

கோன்கால் நீக்கிய கொடுவெண் திங்கள்

கேடில் விழுப்புகழ் நாள்தலை வந்தென” (Jayabal, 2014)

இப்பாடலடிகள் எடுத்துரைக்கின்றன. தீய கோள்கள் நீங்கி திங்கள் மண்டிலம் உரோகிணியைக் கூடிய நன்னாளிலே வைகறைப் பொழுதில் திருமணத்தை தமிழர் நடத்தினர். திருமணத்திற்கு முன்பே கால்கள் நட்ட பந்தலில் புதுமணல் பரப்பினர். மனையெங்கும் விளக்குகளை ஏற்றி மாலைகளைத் தொங்கவிட்டனர்.

## சீதனம் கொடுத்தல்

திருமணத்தினைச் செய்து வைக்கும் முதிய மகளிர் தலையிலே குடத்தையும் கையிலே புதுமண் பாத்திரத்தினை ஏந்தி திருமணத்திற்கு முன்பே கொடுக்கக்கூடிய பொருள்களையும் திருமணத்திற்கு பின்பு கொடுக்கக்கூடிய பொருள்களையும் முறையே கொண்டு வந்து வைத்துள்ளதை,

“உச்சிக் குடத்தர் புத்துஅகல் மண்டையர்

பொதுசெய் கம்பலை முதுசெம் பெண்டிர்

முன்னம் பின்னவும் முறைமுறை தரத்தர”

இப்பாடலடிகள் அறியமுடிகின்றது (Jayabal, 2014) .

## தலைவிக்கு மண நீராட்டுதல்

பண்டைத் தமிழர்கள் திருமணத்தன்று பெண் நீராட்டினர். இதனை,

கடிநகர் புணைந்து கடவுட் பேணி

படுமண முழவொடு பரூஉப்பணை இமிழ

வதுவை மண்ணிய மகளிர் விதுப்புற்று” (Jayabal, 2014)

இப்பாடல் அடிகள் சுட்டுகின்றன. திருமண வில்வத்தை முதலில் அணிந்துக் கொண்டு மணப்பெண்ணும், மணமகனும் இறைவழிபாடு செய்தனர். அப்போது திருமண முழவும் பெரிய முரசும் முழங்க மங்கல மகளிர் தலை மண நீராட்டினர்.

## மணமக்களை வாழ்த்துதல்

திருமண நாளன்று மணமக்களை மலர்கள் தூவி வாழ்த்தும் பழக்கம் பண்டைத் தமிழர்களிடையே இருந்துள்ளது என்பதை அகநானூற்றுப் பாடல் வழிக் காணலாம். இதனை,

“புதல்வற் பயந்த திதலை அவ்வாயிற்று

வால்இழை மகளிர் நால்வர் கூடிக்

கற்பினின் வழாஅ நற்பல உதவிப்

பெற்றோர் பெட்கும் பிணையை

நீரொடு சொரிந்த ஈர்இதழ் அலரி

பல இருங் கதுப்பின் நல்லொடு தயங்க

வதுவை நல்மணம் கழிந்த பிள்ளை” (Jayabal, 2014)

இப்பாடலடிகள் எடுத்துரைக்கின்றன. பிள்ளைகளைப் பெற்ற தூய அணிகளை பெண்கள் நான்கு பேர் கூடி நின்று கற்பினின்றும் வழுவாது பலவற்றினும் உதவியாக இருந்து நின்னை மனைவியாகப் பெற்ற கணவனைப் பேணிக்காக்கும் பெருவிருப்பத்தை உடையதாகுக என கூறி வாழ்த்தினர். நீரொடு குளிர்ந்த இதழ்களையுடைய மலர்களை நெல்லுடன் கலந்து அவளது பலவாகிய கரிய கூந்தலையுடைய தலையிலே தூவினர். இவ்வாறாக வதுவை மணமும் நடந்து முடிந்தது.

## உணவு

உணவு என்பது எல்லா உயிரினங்களுக்கும் பொதுவானது. பொதுவானதாக இருந்தாலும் ஒவ்வொரு உயிரினத்திற்கும் உணவு வேறுபட்டதாகும். மனிதனின் அடிப்படைத் தேவையான உணவும் நீரும் உலகின் எல்லா நாகரிகங்களிலும் தனித்த இடத்தை பெறுகின்றன. உணவு மனிதனுக்கு ஆற்றலை தருகின்றது. உதிர்ந்த வரகினை அகன்ற பாறையில் அள்ளிக் குவித்து, திரிகையில் இட்டுத் தீட்டினர். மண்ணாற் செய்த பானையில் இவ்வரகரிசியை இட்டுச் சுண்ணநீரை ஊற்றி கற்களை அடுக்கி அமைத்த அடுப்பில் உலை ஏற்றி. பானையில் சமைத்தலை பண்பாட்டு மரபாக கொண்டுள்ளனர். இதனை,

“பண்ணை வெண்பழத்து அரிசி ஏய்ப்ப

சுழல் மரம் சொலிந்த களகு அலை வெண்கூழ்

தொடிமாண் உலக்கை ஊழின் போக்கி

உரல்முகம் காட்டிய சுரைநிறை கொள்ளை

ஆங்கன் இருஞ்சுனை நீரொடு முகவா

களிபடு குழிசிக் கல்அடுப்பு ஏற்றி”

இப்பாடலடிகள் உறுதிப்படுத்துகின்றன (Jayabal, 2014) .

## விருந்தோம்பல்

விருந்தோம்பல் என்பது பண்பாட்டு கூறுகளில் தலையாய ஒன்றாகும். சங்ககால மக்களிடையே விருந்தோம்பல் என்ற பண்பாடு இருந்துள்ளதை அகநானூற்றுப் பாடல் மூலம் அறியலாம்.

"புல்லென் மாமலைப் புலம்கொள் சீறூர்

இருந்த செல்விருந்து ஆற்றி துச்சில்" (Jayabal, 2014)

இப்பாடல் பொலிவில்லாது தனித்து இருக்கும் பெரிய மலையைச் சிற்றூரில் தன்கண் வரும் விருந்தினராக அவர்கள் ஏற்று, விருந்தைச் செய்து குடியிருப்பில் அவர்களைத் தங்கச் செய்துள்ளனர். தற்காலத்தும் விருந்தோம்பல் என்பது வழக்கமாக இருந்து வருகின்றது.

## அணிகலன்கள்

அணிகலன்கள், அணிபவரின் அழகை மிகுந்துகாட்டுகின்றன. பண்டைத் தமிழர்கள் ஒப்பனைக்காகப் பலவகையான அணிகலன்களைப் பயன்படுத்தினர். தொடக்க காலத்தில் தமிழர்கள், இலை, தழை, தளிர் ஆகியவற்றால் ஆன இயற்கை அணிகலன்களை அணிந்தனர். பின்னர் உலோகங்களால் செய்யப்பட்ட செயற்கை அணிகளைப் பயன்படுத்தினர். அகநானூற்றின் வழி நகை, குழை, தொடி, வளை, சிலம்பு போன்ற அணிகலன்களை அணிந்துள்ளதை அறியமுடிகின்றது.

## ஆடை

மனித இனத்தின் அடிப்படைத் தேவை உணவு, உடை, உறையுள் ஆகிய மூன்றாகும். இவற்றுள் மானத்தைக் காப்பதும் மதிப்பை உண்டாக்குவதும் அவர்கள் உடுத்தும் உடையேயாகும்.

"ஆடையில்லா மனிதன் அரைமனிதன்

ஆள்பாதி ஆடை பாதி"

இது போன்ற பழமொழிகள் ஆடையின் இன்றியமையாமையை உணர்த்துகின்றன.

"ஞாழல் ஓங்குசினைத் தொடுத்த கொடுங்கழித்

தாழை வீழ் கயிற்று"

"பைங்குழைத் தழையர் பழையர் மகளிர்" (Jayabal, 2014)

என்றப் பாடல்கள் பண்டைக் காலத்தில் வாழ்ந்த பெண்கள் மானத்தை காப்பாற்றிக் கொள்ள பசுமையாக உள்ள தளை ஆடைகளை உடுத்தியுள்ளனர் என்பதை சுட்டுகின்றன.

## சிலம்பு

சிறிய வயதிலே பெண்கள் சிறிய கால்களில் சிலம்பினை அணிந்திருந்தனர். பல வகையான வளையல்களையும் அணிந்திருந்ததை அகநானூற்றுப் பாடல்களில் காணமுடிகிறது.

"சிறு முதுக்குரைவி சிலம்பு ஆர் சீறடி

வல்லகொல் செல்லத் தாமே-கல்லென"

"அவிர் தொடி முன்கை ஆய்இழை மகளிர்"

"ஒண்தொடி மடந்தை தோள்இணை பெறவே"

"ஒண்தொடி நெகிழச் சாஅய் சொல்லொடு" (Jayabal, 2014)

இப்பாடல் தொடரில் ஒளிப்பொருந்திய வளையல்களை பெண்கள் கைகளில் அணிந்துள்ளனர். வளையல் அணியும் பண்பாட்டு மரபு பண்டைய காலத்தில் இருந்தே வழக்கத்தில் இருந்துள்ளன என்பதை அறிய முடிகின்றது.

## விளையாட்டு

விளையாட்டு மனிதனைப் புத்துணர்வு உடையவனாக மாற்றுகின்றது. விளையாட்டுகள் ஒரு மனிதன் பிறருடன் இணைந்து வாழும் மனப்பான்மைஉடையவனாகச் செய்வதற்கு துணைப் புரிவதாக அமைகின்றன. விளையாட்டுகள் மனிதனுக்கு உடல் வலிமை, மனவலிமை, நம்பிக்கை, உறவு நிலை, சமுதாய ஒற்றுமை, பெற என பல விதங்களில் நமக்கு உதவுகின்றன. மனிதர்களுக்கு மட்டுமல்லாமல் பறவைகள், விலங்குகள் என அனைத்து உயிரினங்களிடையேயும் விளையாட்டு இருக்கின்றன. விளையாட்டு இன்று மக்களின் பார்வையில் பெரும் புரட்சியை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது.

விளையாட்டுகள் நேற்றோ, இன்றோ நம் வாழ்க்கையில் கலக்கவில்லை. நமது தொல்குடிகளின் வாழ்க்கையிலேயே கலந்துள்ளது என்பதை நாம் இலக்கண இலக்கியங்கள் வழி பரவலாக அறிய முடிகின்றது. நமது இலக்கியங்களில் ஓரை விளையாட்டு, பந்தாடுதல், புனலாடுதல், வண்டிழைத்தல், ஊஞ்சல், சிற்றில் இழைத்தல், காய்மறை, நெல்லி வட்டு, கழங்காடுதல், வட்டாடுதல், மீன்பிடி விளையாட்டு, வள்ளை, அம்புலி காட்டல், குரவை, சிறுதேர், ஏறுதழுவுதல், குறும்பு விளையாட்டுகள் என பல விளையாட்டுக்கள் பதிவுச் செய்யப்பட்டுள்ளன. தமிழில் கிடைத்துள்ள மிகத் தொன்மையான இலக்கண நூலாகக் கருதப்படும் தொல்காப்பியம் விளையாட்டு பற்றியச் செய்தியை நமக்கு பகிர்கின்றது.

"செல்வம் புலனே புணர்வு விளையாட்டென

அல்லல் நீத்த உவகை நான்கே" (Ilampurananar, 2000)

மெய்பாட்டியலில் தொல்காப்பியர் உவகை எனும் மெய்ப்பாடு தோன்றும் நான்கு களன்களில் விளையாட்டும் ஒன்று எனக் குறிப்பிட்டுள்ளார்.

காலில் அணிந்துள்ள சிலம்பின் ஒலி உண்டாகும்படி தன் தோழியர்களோடு தலைவி ஓரை என்னும் விளையாட்டினை விளையாடினாள் என்று குறிப்பிட்டுள்ளதை,

"கோதை ஆயமொடு ஓரை தழீஇ,

தோடு அமை அரிச் சிலம்பு ஒழிப்ப" (Jayabal, 2014)

என்ற அகநானூற்றுப் பாடலில் வண்ணப்புறக் கந்தரத்தனார் என்றப் புலவர் குறிப்பிடுகின்றார்.

## விழாக்கள்

சங்க காலத்தில் விழாக்கள் சிற்றூர்களிலும், பேரூர்களிலும், மூதூர்களிலும் கொண்டாடப்பட்டதை அகநானூற்று பாடல் வழி அறிய முடிகின்றது. இடைவிடாது முழவு ஒலியானது முழங்க விழாக்கள் பேரூர்களில் நடைபெற்றதை,

"முழவுமுகம் புலரா விழவுடை வியல்நகர்" (Jayabal, 2014)

என்ற இவ்வடி மூலம் அறியலாம். சோலை சூழ்ந்த கடற்கரையை உடைய சிற்றூர்களில் திருவிழாக்கள் நடைபெற்றதை,

"விழவுஅயர் மறுகின் விலைஎனப் பகரும்

கானல்அம் சிறுகுடி பெருநீர்ச் சேர்ப்ப" (Jayabal, 2014)

என இவ்வடிகள் புலப்படுத்துகின்றன. விழாக்களைக் கொண்ட மூதூரில் இலவ மரங்களில் இருந்து மலர்கள் கீழே விழுவது நெய் ஊற்றப்பெற்ற விளக்கிலிருந்து விழுகின்ற சுடர் போன்று காணப்பட்டது.

"விழவுத் தலைக்கொண்ட பழ விறல் மூதூர்" (Jayabal, 2014)

இவ்வரி மூலம் மூதூரில் விழா நடைபெற்றதை அறிய முடிகின்றது. மூதூர் என்ற பழமையான ஊரில் எந்நாளும் இடைவிடாது விழாக்கள் நடைபெற்றதை,

"அழியா விழவின் அஞ்சு வரு மூதூர்" (Jayabal, 2014)

என்ற அடிகள் சுட்டுகின்றது.

## முடிவுரை

பழங்கால மக்களின் வாழ்க்கை முறை அவர்களின் செயற்பாடுகளைத் தெரிவிக்கும் ஒரு வரலாற்றுப் புத்தகமாக அகநானூறு திகழ்கிறது. பண்டைய தமிழர்கள் உரோகிணி நட்சத்திர நாளில் திருமணத்தை நடத்தியுள்ளனர். புதுமணல் பரப்பி மனைகள் தோறும் விளக்குகள் ஏற்றி மலர் மாலைகளைத் தொங்கவிட்டு இல்லங்களை அலங்கரித்துள்ளனர். பாத்திரங்கள் மற்றும் இதரப் பொருட்களைச் சீதனமாகக் கொடுத்துள்ளனர். முழவும் முரசும் முழங்க தலைவிக்கு மகளிர் மணநீராட்டியுள்ளனர். மணமக்களை மலருடன் நெல்லினைச் சேர்த்து வாழ்த்தியுள்ளனர். தமிழர்களின் தலைச்சிறந்த பண்பாட்டில் ஒன்று விருந்தோம்பல். அத்தகைய விருந்தோம்பலையும் அகநானூற்றில் காணமுடிகிறது. குழை, தொடி, வளை, சிலம்பு போன்ற அணிகலன்களையும் இலை, தழை, தளிர் ஆகியவற்றால் ஆன இயற்கை அணிகலங்களையும் அணித்துள்ளனர். இதன் வழியாக பழந்தமிழ் சமூகத்தின் மதிப்பினை உய்த்துணர முடிகின்றது.

## References

Bhaktavatchala Bharathi (2016) Panpattu Manudaviyal, Meyyappan Pathipakam, Chidambaram, India

Ilampurananar (2000), Tholkappiyam Porulathikaram, Mullai Nilaiyam, Barathi Nagar, Chennai, India

Jayabal (2004) Agananooru, New Century Book House Pvt Ltd, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License